காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முடிவுகள் திறம்பட அமல்படுத்தப்படுவதை உறுதி செய்து

# ஒன்றிய அரசு தமிழக விவசாயிகளை பாதுகாக்க வேண்டும்!

## மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மானத்தில் கதிர் ஆனந்த் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக.9-

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான அறிவிப்பை அளித்துள்ளார்.



காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவு (காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தால் உறுதிப்படுத்தப்பட்டது) - பிலிகுண்டுலுவில் ஜூலை 29, 2026 முதல் 15 நாட்களுக்கு தினசரி 3,500 கனஅடி நீர் வெளியேற்றம் - சரியான நேரத்தில் திறம்பட அமல்படுத்தப்படாதது குறித்து மத்திய அரசு, குறிப்பாக ஜல் சக்தி அமைச்சகம் தோல்வியடைந்துள்ளது என்பதே இவ்விவகாரம்.

சட்டப்பூர்வ உத்தரவுகள் இருந்தபோதிலும், ஆரம்ப முக்கியமான காலத்தில் தேவையான நீர் உறுதி செய்யப்படவில்லை. பல நாட்கள் உண்மையான நீர்வரத்து மிகவும் குறைவாகவே இருந்தது. இதனால் கடுமையான குறைபாடு ஏற்பட்டு, காவிரி டெல்டா விவசாயிகளின் நின்று கொண்டிருக்கும் குருவைப் பயிரும், லட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரமும் உடனடி அபாயத்தில் உள்ளது. முக்கியமான பயிர் காலத்திற்குப் பிறகு வழங்கப்படும் நீர், ஏற்படும் சேதத்தை முழுமையாகத் தடுக்க முடியாது.

தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகி உத்தரவை அமல்படுத்தவும், திரண்ட குறைபாட்டை ஈடுகட்டவும் கோரியுள்ளது.

கதிர் ஆனந்த் கூறியதாவது:-

"காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முடிவுகள் திறம்பட அமல்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசுக்கு நேரடி பொறுப்பு உள்ளது. முழு குறைபாட்டையும் உடனடியாக ஈடுகட்டவும், அவசர சி.டபிள்யூ.எம்.ஏ. கூட்டம் நடத்தவும், தினசரி சரிபார்க்கப்பட்ட நீர்வரத்து தரவை வெளியிடவும், தமிழக விவசாயிகளையும் நின்று கொண்டிருக்கும் பயிர்களையும் பாதுகாக்கவும் உடனடி தலையீட்டை நான் கோருகிறேன். நமது விவசாயிகளின் வாழ்வாதாரம் ஆபத்தில் இருக்கும்போது ஒன்றிய அரசு தனது கடமையை கைவிட முடியாது."

இவ்வாறு கதிர் ஆனந்த் கூறினார்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பஜார் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞரின் திரு உருவ சிலைக்கு மேனாள் அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பகுதி கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் , மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்டத் துணை செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மணிகண்டன் நாடிமுத்து, பா.அருண்குமார் , நிஷா சையத், கொட்டிவாக்கம் மா.பார்த்திபன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# பெண்களுக்கான ஆயுஷ் மருத்துவ சேவைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும்!

## மக்களவையில் காஞ்சிபுரம் க.செல்வம் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.9-

தமிழ்நாட்டில் பெண்களுக்கான ஆயுஷ் மருத்துவச் சேவைகளின் முன்னேற்றம், தாய்-சேய் நலம், இரத்தச்சோகை தடுப்பு, இளம்பெண்கள் நலம், மாதவிடாய் நிறைவு கால பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் குறித்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய ஆயுஷ் அமைச்சகம் முக்கிய தகவல்களை தெரிவித்துள்ளது.

க.செல்வம் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய ஆயுஷ் துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் 07.08.2026 அன்று அளித்த பதிலில், தமிழ்நாட்டில் பெண்களுக்கான ஆயுஷ் மருத்துவ சேவைகள் பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

### தமிழகத்தில் 650 ஆயுஷ் நலவாழ்வு மையங்கள்!

தேசிய ஆயுஷ் இயக்கத்தின் கீழ் தமிழ்நாட்டில் 650 ஆயுஷ் சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் மூலம் தொலை மருத்துவம் உள்ளிட்ட டிஜிட்டல் சுகாதார சேவைகள், சுகாதார விழிப்புணர்வு முகாம்கள், யோகா பயிற்சிகள், நலவாழ்வு நடவடிக்கைகள் மற்றும் நோய் தடுப்பு சுகாதாரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், கிராமப்புற மாவட்டங்களில் 94 இணை ஆயுஷ் மருத்துவப் பிரிவுகளும், கிராமப்புற கடலோர மாவட்டங்களில் 40 பிரிவுகளும், நகர்ப்புற கடலோர மாவட்டங்களில் 16 பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

### 3.47 லட்சம் பெண்கள் பயனடைந்துள்ளனர்!

தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில், தாய்-சேய் நலம், இரத்தச்சோகை மேலாண்மை, இளம்பெண்கள் நலம், மாதவிடாய் நிறைவு கால பராமரிப்பு மற்றும் நலவாழ்வு தொடர்பான ஆயுஷ் சேவைகளை 3,47,112 பெண்கள் பெற்றுள்ளனர்.

சித்த மருத்துவத்தின் 'மகப்பேறு சஞ்சீவி' திட்டத்தின் கீழ் மட்டும் கடந்த ஆண்டில் 1,27,084 கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.



### யோகா – இயற்கை மருத்துவத்திலும் பெண்களுக்கு சிறப்பு கவனம்

பெண்களின் கர்ப்ப கால மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு, வாழ்க்கை முறை மாற்றம், மன அழுத்த மேலாண்மை, ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் மனநலத்தை மேம்படுத்தும் வகையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் 1,31,160 பெண்கள் கர்ப்ப கால மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய யோகா மற்றும் இயற்கை மருத்துவத் திட்டங்களின் மூலம் பயனடைந்துள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

### காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3,726 பெண்கள் பயன்

'மகப்பேறு சஞ்சீவி' திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 3,726 பெண்கள் பயனடைந்துள்ளனர். 2023-24ஆம் ஆண்டில் 1,507 பேரும், 2024-25 ஆம் ஆண்டில் 2,080 பேரும், 2025-26ஆம் ஆண்டில் 139 பேரும் பயனடைந்துள்ளனர்.

பெண்களின் உடல் மற்றும் மனநலம், ஊட்டச்சத்து, நோய் தடுப்பு மற்றும் முழுமையான நலவாழ்வை மேம்படுத்தும் வகையில் ஆயுஷ் மருத்துவச்சேவைகளை தமிழ்நாட்டில் மேலும் ஒருங்கிணைத்து வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

பெண்களின் நலனுக்காக நாடாளுமன்றத்தில் காஞ்சிபுரம் தொகுதி மக்களவை உறுப்பினர் க.செல்வம் தொடர்ந்து கேள்விகளை எழுப்பி, ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்த்து வருவதன் தொடர்ச்சியாக இந்த முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழ்நாட்டில் 'மிஷன் சக்தி' திட்டத்தின்கீழ் செயல்படும்

# திட்ட சேவைகளின் தற்போதைய நிலை என்ன !

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 9 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டில் மிஷன் சக்தி திட்டத்தின் சம்பல் மற்றும் சமர்த்யா கூறுகளின் கீழ் செயல்படும் திட்ட சேவைகள் உட்பட, அத்திட்டத்தை செயல்படுத்துவதன் தற்போதைய நிலை என்ன?

கடந்த 5 ஆண்டுகளில், குறிப்பிட்ட மாநிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன?



கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி உட்பட, மாவட்ட வாரியாக, இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த மையங்கள், மகளிர் உதவித் தொலைபேசி சேவைகள் மற்றும் பிற மகளிர் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் உதவி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பாக மாநிலத்தின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில், பயிற்சி பெற்ற பணியாளர் உள்கட்டமைப்பு வசதிகள், இடைவெளிகள் மற்றும் பெண்களிடையே விழிப்புணர்வு உள்ளிட்ட, இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்களுக்கு ஒன்றிய அரசு உதவியுள்ளதா ?

குறிப்பிட்ட மாநிலத்தில் இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளைப் பெறுவதை மேம்படுத்துவதற்காக ஒன்றியஅரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

# பின்தங்கிய மற்றும் கிராமப்புற மாவட்டங்களில்

# டிஜிட்டல் இடைவெளியைப் போக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் - ஆ.மணி கேள்வி

புதுடெல்லி, ஆக. 9 -

பின்தங்கிய மற்றும் கிராமப்புற மாவட்டங்களில் நிலவும் டிஜிட்டல் இடைவெளியைப் போக்கும் வகையில்,குறிப்பாக தமிழ்நாட்டின் தருமபுரி மாவட்டத்தில், பிராட்பேண்ட் இணைய இணைப்பு விரிவாக்கம், டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் சேவைகளை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு ஏதேனும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் டிஜிட்டல் இணைப்பு, ஃபைபர் உள்கட்டமைப்பு மற்றும் கிராமப்புற டிஜிட்டல் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துதல், பொது சேவை மையங்களை (CSC) வலுப்படுத்துதல், மின்னணு ஆளுமைச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை செயல்படுத்தியுள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?



தருமபுரி மாவட்டத்தில் அதிவேக இணைய இணைப்பு, கடைசி நிலை (LastMile) டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் வீடுகளுக்கே டிஜிட்டல் அரசு சேவைகளை வழங்கும் முறையை மேம்படுத்துவதற்காக கூடுதல் திட்டங்கள் ஏதேனும் முன்மொழியப்பட்டுள்ளனவா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன? என்று மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதாவிடம் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

# 139 'அ' வட்டக் கழகம் சார்பில் அனைத்துப் பாகங்களிலும்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை!

## சை.மு.சேகர் தலைமையில் – சுமதி தீனதயாளன் – பூபதி வெங்கடேசன் – எம்.எஸ்.அரிபாபு – டி.என்.சிவமணி பங்கேற்பு!

சென்னை, ஆக. 9-

139 அ வட்டக்கிளை அலுவலகத்தில் 07.08.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி வட்டச் செயலாளர். சை.மு. சேகர் தலைமையில் சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், முன்னிலையில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர். எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி அவைத்தலைவர். டி.என்.சிவமணி ஆகியோர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

உடன் ஜி.ஏழுமலை, நியு காலனி சம்பத், துளசி சந்திரசேகர், வழக்கறிஞர். எஸ். அருண்குமார் வி.வாசு தேவன், கா.மூர்த்தி, மா.கோவிந்தசாமி, ப.மோகன்,ஏ.எம். சேகர் மரியாதை செலுத்தினர். மற்றும் ஒவ்வொரு பாகத்திலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படம் வைத்து மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியவர்கள்.

பாகம்-3. கல்நார் குடியிருப்பு பகுதி பிரதிநிதி யமஹா. ராஜேஷ் சரவணன், பாகம் 4.சாரதிநகர். வட்ட துணை செயலாளர். பி.எஸ்.பிரகாஷ், மு.காத்தவராயன், என்.எஸ். கார்த்திக், எஸ்.அன்னபூரணி, பாகம் 5. வி.எஸ்.முதலி தோட்டத்தெரு பாகத் தலைவர். எஸ்.முருகன், வி.வாசுதேவன், ஏ.எம்.சேகர் பாகம் 6. வி.எஸ்.முதலி தோட்டத் தெரு. பாகத் தலைவர். ஆர். கண்ணன், க.சிவசண்முகம், எம்.லோகம்மாள். பாகம் 7. அப்பாதுரை தெரு. மாவட்ட துணை அமைப்பாளர். என். தீனதயாளன், சுமதி தீனதயாளன், பாகம் 8.காந்தி தெரு. வட்ட துணை செயலாளர். மா.ஏழுமலை, தா.கார்த்திக் பாகம் 9. வீதிமாரியம்மன் கோயில். பகுதி பிரதிநிதி. ஜி.ஏழுமலை,பி.பாலு, என். பழனி, பாகம் 10.வ.உ.சி. பிளாக். பாகத் தலைவர். என். ரமேஷ், எஸ்.வி.நட்டார், கே.சுனில்குமார்,

பாகம் 19.சுசிலா தெரு. பாகத் தலைவர். ஜெ. தமிழ்ச்செல்வன், ஜி.நாகதேவி, கே.மனோகர்,பி.சுரேஷ் பாகம்.20நியுகாலனி. பகுதி பிரதிநிதி. டி.கோபாலகிருஷ்ணன் பாகம் 21.சேகர் நகர் பகுதி அமைப்பாளர். பூ.பாஸ்கர்,சி.மதியழகன் ஜி.சீனிவாசன், கே.வேலாயுதம், கமல் பாகம்.22.வள்ளுவர் தெரு. பாகத் தலைவர். கே.விஜயகுமார், த.சேகர், எஸ். ரமேஷ்,அரிபாபு. பாகம். 23. மேற்கு ஜோன்ஸ் சாலை. கொடி.சுரேஷ்,மு.மூர்த்தி பாகம்.24. வேணுகோபால் தெரு. வட்ட பொருளாளர். பூபதி.வெங்கடேசன், வி. பி.சிவகுமார், எம்.சதீஷ்,செ. சந்துரு

பாகம்.25.செல்வ விநாயகர் கோயில் தெரு. பாகத் தலைவர். ப.எழிலரசன், ஆர். கன்னியப்பன், மோ.பிரபுராம். பாகம் 26.விநாயகர் கோயில் தெரு. பகுதி அமைப்பாளர். சார்ப். சரவணன், டைல்.ராதாகிருஷ்ணன் பாகம்.27.பெருமாள் கோயில் விரிவு தெரு. து.வடிவேலு, து.மல்லிகா, கலா பாகம் 28.தேவு தெரு. வட்ட அவைத் தலைவர். இ. வரதன், லட்சுமி மற்றும் பலர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 139 அ வட்டச் செயலாளர் சை.மு.சேகர் செய்திருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. செங்குட்டுவன்

ஆகஸ்ட் 9 (1996)



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் தலைமையில் மாதவரம் வடக்குப் பகுதி

# 23 (அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

மாதவரம், ஆக.9-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் காவாங்கரை வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

23 (அ) வட்டச் செயலாளர் வி .ஆர்.குப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். கூடியிருந்த நிர்வாகிகளும், பொதுமக்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் புகழ் ஓங்குக என கோஷங்கள் எழுப்பி நினைவு நாளை அனுசரித்தனர்.

நிகழ்ச்சியில் வட்ட அவைத் தலைவர் அ.ராமச்சந்திரன், வட்ட துணைச் செயலாளர் எம்.உசேன் மொய்தீன், பகுதி பிரதிநிதி அ.அப்துல் சமது, வி.ஆர். கே. ஜவகர், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆர்.ஜெயபாரதி, சடையங்குப்பம் பர்மா நகர் தினேஷ், சங்கர், எஸ்.சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



மாதவரம் வடக்கு பகுதி, 23 (அ) வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். 23 (அ) வட்டச் செயலாளர் வி. ஆர்.குப்பன் தலைமையில் அ.ராமச்சந்திரன், எம்.உசேன் மைதீன், அ.அப்துல் சமது, வி.ஆர். கே.ஜவகர், ஆர்.ஜெயபாரதி, தினேஷ், சங்கர், எஸ்.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளில் 46வது (அ) வட்டம் சார்பில் வட்ட பொறுப்பாளர் ச.ராஜன் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். இதில் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.